தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2 } நவம்பர் - டிசம்பர் 1942 { இதழ் 11, 12

அஷ்டாங்க பாலி கிளினிக்ஸின் தொண்டு

—: -o- :—

இந்திய மருத்துவ கலாசாலைக்குத் தலைவராயிருந்த வைத்திய ரத்தினம் G. சிநிவாசமூர்த்தியவர்கள் இந்திய மருத்துவத்தின் முன்னேற்றத்தைக் கருதி அடையாற்றில் 'அஷ்டாங்க பாலி கிளினிக்ஸ்' என ஒரு மருத்துவச்சாலையைத் தொடங்கியிருக்கிறார். அங்குப் பல முறைகளிலும் மருத்துவம் செய்யப்படும். கண் மருத்துவமும் தமிழ் மருத்துவப்படி செய்யவேண்டுமென எண்ணி, கண் வைத்தியத்தில் நிபுணரும், பரம்பரை வைத்தியருமான தஞ்சாவூர் T. S. அமிர்தலிங்கம் பிள்ளையவர்களை வரவழைத்திருக்கிறார்கள். அதுமட்டுமன்றி அவர்களைக் கொண்டு வாரத்திற்கு மும்முறை, அதாவது திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை 4½-மணிக்குப் பாடமும் நடத்தப்படுகிறது. கண் மருத்துவத்தைப்பற்றிப் போதிக்க, பிள்ளையவர்களைப்போல அவ்வளவு பழக்கம் வாய்ந்தவாகள் இந்நாட்டிலில்லை யென்றே நாம் கூறலாம். ஆகையால் இந்த அரிய தருணத்தை யாவரும் பயன் படுத்திக் கொள்வார்கள் என எண்ணுகிறோம்.

பிள்ளையவர்களுக்குப் பிறகு அவர் குடும்பத்தில் அத் தொழிலைச் செய்பவர்கள் எவருமில்லை யென அறிவதால், அவருடன் இம் மருத்துவமும் எங்கு மறைந்து விடுமோவென பயப்படுகிறோம் அங்ஙனம் மறையாதிருப்பதற்காகவும், வளர்வதற்காகவும் ஒவ்வொரு L. I. M.மும், L. I. M.மாணவரும் அப்பாடத்தைக் கட்டாயமாக கேட்க வேண்டுமென கோருகிறோம்.

இந்திய மருத்துவக் கலாசாலையில் மாலை 5-மணிவரையில் வேலை செய்து, அதற்குப்பின் குறித்த காலத்தில் பாடங்கேட்க அடையாற்றுக்குச் செல்ல இயலாது. போக்கு வரத்து வசதிகள் குறைந்திருக்கும் இப்போர்காலத்தில் அங்குச் செல்ல குறைந்தது ஒருமணி நேரத்திற்குமேல் ஆகிறது. இவைகளை உள்ளத்தில் கொண்டு தக்கன செய்யுமாறு நமது முதற்தலைவரும், பழைய தலைவருமான வைத்தியரத்தினம் G. சீநிவாசமூர்த்தியவர்களை வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறோம்.

1942-ம் ஆண்டு

நமது நோக்கத்தின்படி இவ்வாண்டு ஒரு பழைய நூலையேனும் அச்சிடக்கூடவில்லை. பெரியோர்கள் கொடுத்த பொருளிருந்தும், வேண்டிய அளவு தாள்கள் கிடைக்காததால்தான் நமது எண்ணம் ஈடேறவில்லை. அத்தாள் பஞ்சத்தால் தான் நமது இதழின் பக்கங்களுங்குறைந்து விட்டன. புதிய ஆண்டிலாயினும் நமது எண்ணம் கைக்கூடுமா என்பதும் சந்தேகமாகவிருக்கிறது. நூல்களை புதுப்பிக்க முடியாவிட்டாலும், தமிழ் மருத்துவப் பொழிலுக்கு வேண்டிய தாள்களாவது கிடைக்குமா என்பதும் தெரியவில்லை. South Indian Export கம்பனியார்களின் உதவியால்தான் இவ்வாண்டு பிற்பகுதியில் நமது மலர்கள் வெளிவந்தன. அவர்கள் உதவியைக் கருதியே மற்றும் ஓராண்டு பொழிலைத் தொடர்ந்து அச்சிடத் திடங்கொண்டோம். எவ்வித இடையூர்களும் நம்மை பாதிக்காமலிருக்கவேண்டுமென்றும் குறித்த காலத்தில் இதழ்கள் இனி வெளிவரவேண்டுமென்றும் இறைவனைத் தொழுவோம்.

படைக்குச் சூரணம்

செப்பு மாவாரை தேர்ந்த பஞ்சாங்கம்
ஒப்பும் பறங்கி யுற்ற சூரணம்
தப்பில் லாமல் தனியக் கலந்துமே
வெப்பில் லாமல் விரும்பி சீனியுண்ணே

உண்ணும் போது உடம்பு படைரோகம்
நண்ணுஞ் சொறியும் நாடா துறங்கிடும்
குண்ணு மேனி குழவியே தங்கமாம்
எண்ணு தேர னெழிலா யறைந்ததே

பவழம்

டாக்டர் ரு. தியாகராஜன்.

(130-ம் பக்கத் தொடர்ச்சி)

—(:0:)—

பவழபற்பத்தின் அனுபானமும், பிணிநீக்கமும் :—

யமகப்படி செய்த பற்பத்தை அளவாக கீழ்க்காணும் அனுபானங்களில் கொடுத்துவர அவைகளின் நேர் குறித்துள்ள நோய்கள் தீரும்.

மாதளை வித்தை வேளைக்குக் கால் பலமாக மூன்று பலம் நீரில் ஊறவைத்தரைத்து அரைக்கால் பலம் பழைய வெல்லமிட்டுக் குழைத்து அதில் பசுப்பால் மூன்றுபலம் விட்டுக்கலந்து தினம் இருவேளை வீதம் ஒரு மண்டலம் அருந்த வாத மேக உஷ்ணத்தினுலுண்டாகும் விந்து நட்டம் நீங்கி வீரிய விருத்தி யுண்டாம்.

எண்ணெய், கடுகு, புளி, பெண்போகம் நீக்கிப் பத்தியம் காக்கவும். பால் பானம் செய்து அத்திப் பழத்தையும் மாம் பழத்தையும் பல ஆகாரமாக கொண்டுவர பிணி நீங்கிப் பலம்வரும்.

மேற்படியே முருங்கைவித்தை ஊறவைத்தரைத்து அரைக்கால் பலம் சர்க்கரையிட்டுக் குழைத்து அதில் பசுவின் நெய்விட்டுக் கலந்து மேற்படி பத்தியத்துடன் அருந்த பித்தமேக உஷ்ணத்தினுலுண்டாகும் விந்து நட்டம் நீங்கி வீரிய விருத்தி யுண்டாம்

வெந்நீர் பானம் செய்து பலா பழத்தையும், பனம் பழத்தையும் உட்கொண்டுவர பிணி நீங்கிப் பலமுண்டாகும்.

மேற்படியே புல்லாஞ்சிவித்தை ஊறவைத்து அரைத்து கற்கண்டிட்டுக் குழைத்து அதில் பசுவின் வெண்ணெயிட்டுக் கலந்து மேற்படியே யருந்த கபமேக உஷ்ணத்தினுலுண்டாம் விந்து நட்டம் நீங்கி, வீரிய விருத்தி யுண்டாகும். மற்றும் கிச்சலிப் பழத்தையும் வாழைப் பழத்தையும் நினைத்தபோதெல்லாம் அருந்திவர சவுக்கியமாம். இதனைக் கீழ்க்கண்ட செய்யுட்களினுல் அறிக.

“விரைமா தளைதவைபூல் வெல்ல மயிர்கண்டு
விரைமா தளைசுதைநெய் வெண்ணெய்—விரைமா
வருக்கை பனைநரந்தை வாழை யுணவுண்ட
வருக்கை பனைநரந்தை மால்”

(தேரன் யமக வெண்பா)

"வாத முதலனல் வந்திடு மேகத்தாலச்
சேத மிகுவிந்து சீர்பெற வேண்டினோர்
மாதளை யாதி வரிசை வித்துண்பவர்
தாது மிகுந்து தழைப்பர் முன்போலவே"

(திருமூலர் திருமந்திரத்திரட்டு)

அனுபானம்		தீரும் நோய்கள்
நெய்	—	சயரோகத்தைச் சேர்ந்த உப்பச வாந்தி
பனங்கள்	—	மேக சூட்டினால் வரும் சீழ்
வெண்ணை	—	வாத, பித்த சுரங்கள்
பசுப் பால்	—	கப சுரம்
பசுத்தயிர்	—	கடுப்பு வாதம்
பசுமோர்	—	நடுக்கு வாதம்
நீர்	—	பிடிப்பு வாதம்
துளசிச் சாறு	—	கல்லீரல் வீக்கம்
இளநீர்	—	பித்த காசம்
பனை நுங்கு	—	கப காசம்
நெல்லிக்காய் சாறு	—	பித்தமேக தினவும் வெட்டை யூறலும்
கொத்தமல்லிச் சாறு	—	கபமேகப் பிணியும், பருக்சட்டியும், ராசச் சிலந்தியும்
சந்தன குழம்பு	—	பித்தத்தைச் சேர்ந்து சீரத்தைக் கடுக்கச்செய்யும் வாத ரோகமும் பெரு வயிற்றுவலியும்
வெல்லம்	—	கபத்தைச் சேர்ந்துவரும் வாதப்பிணி
தேன்	—	பித்தத்தைச் சேர்ந்த நடுக்கு வாதமும் பெரும்பாடும், யோனிப்புற்றும்
வில்வயிலைச் சாறு	—	கபத்தைப்பற்றிய நடுக்கு வாதம்
மகிழம்பூச் சாறு	—	பித்தவாத பந்தமும் மாரடைப்பும்
மூங்கில் சமூலச்சாறு	—	கபப்பிணியும் சிரோபாரமும்
குளநெல்லரிசிமா	—	பித்த வல்லையும் வாதானலமும்
புன்னைசமூலச் சாறு	—	கபத்தைச் சேர்ந்த மாவயிற்று வலியும் பல்லடிநோயும்
சுரப்புன்னைச் சாறு	—	மேகானலப்பிணி
வெந்நீர்	—	மாரகசன்னியும் பட்சவாயும் பிரமையும்

இதனையே திருமூலநாயனார் பின் வருமாறு கூறினார்.

"பிரவாளச் சுன்னத்திற் பேசமனு பானந்
திரமான நெய்முதல் தீநீர்கடை யாகத்
தரமாகக் கொள்ளவே சாராக் கயமுத
லவமாகக் கொண்டதோர் வாளென லாகுமே"

எருக்கம் பாலால் செய்த பவழ பற்பத்தை அரிசியளவு நெய்யில் தினம் இரு வேளையாக உண்டு வந்தால் மேகச்சூடு, காங்கை, இருமல் முதலியன நீங்கும்.

கிழாநெல்லியால் செய்ததை மேற்படி யுண்ண இருமல், வயிற்றுளைச்சலும், நிசிநீரிலுண்ண நீர்க்கடுப்புந் தீரும்.

முயல் இரத்தத்தால் செய்ததை நெய் அல்லது பாலில் மேற்படியே யுண்ண இருமல் நீங்கும். தூதுளைச்சாறில் உண்ண க்ஷயம் நீங்கும்.

கர்ப்பூர சிலாசத்து சேர்த்துச் செய்ததை முன்போல வெண்ணெயில் உண்ண எலும்புருக்கி, மதுமேகம், அஸ்திமேகம், நீர்க்கடுப்பு நீங்கும். தேனில் கொள்ள மேக ஊரல் போம்.

இலந்தையில் போட்ட பற்பத்தைச் சுட்ட எலுமிச்சம் பழச் சாற்றில் மேற்படி யுண்ண சிதபேதி நிற்கும். நெய்யில் உண்ண வரட்டிருமல் நீங்கும்.

பவழபற்பத்தைச் சிறுபுள்ளடிச்சாறு, சிறு செருப்படிச்சாறு, கள் இம்மூன்றிலேயும் அனுபானித்துக் கொடுக்க மேகப் பிணிக் கூட்டங்கள் நீங்கும் என்பதை கீழ்க்காணும் செய்யுளால் உணருக.

சோறிமிகுந்த மேகநோய் தொகைய னைத்துமேகவே
சிறியபட்சி பாதமே சிறுசேருப்பு பாதமே
வெறிகோடுக்கும் நீரினுல் வெகுசிதப்ர வாளமே
திறமளிக்கவே யவை சேகமிசைக்க மேவுமே"

பற்பத்தை யுண்ணும் காலம்:—இப்பற்பத்தினைக் கொள்ளும் காலம் யாதெனில் கார்த்திகை, மார்கழி, பங்குனி, நீங்கிய மற்றைய ஒன்பது மாதங்களுமாம். இப்பற்பத்தினைப் புசிக்குங் கால் தங்குமிடம் யாதெனில், தேரன் யமகவெண்பாவில் பவழ பற்பத்தைக் கூறும் செய்யுளில் "கணியருக்கையாயிருக்கக்கல்" என்ற கடையடி தேவேந்திர போகத்தில் இருக்க விரும்பு, என்று தொனிப்பதால் யாவரும் விரும்பத்தக்க ஆரோக்கிய நிலையைப், பெறுவதற்கு ஏற்ற நிலம் மருதமேயன்றி வேறல்ல என்பது பெற்றும். இதனை,

"வித்துருமத் திருநீற்றை யுரைக்குங் காலை
மேலான பண்டிதரே யறிவாரா ரோ
பத்தரைமாற் றச்சுவணம் வேறேன் றல்ல
பகரளவை மிளகிலேந்து பால தாகும்
வித்தமேனு வயுணத்தேள் வில்மீ ஞகா
மேலிருக்கு மிடப்பணேயே விலக்கா மற்றை
யத்தருரைத் தநுநந்திக் காயுள் வேத
மாகமமிப் படியாமேய் யமைவு தானே"

என்ற மாபுராணத்தினுலும்,

"பவளத் தடலேக்குப் பாரி னிகரில்லே
கவளக் களிற்றின கறியஞ் சளவை
தவளத்தை யுண்ணத் தனுதேண்மீ ஞகா
சுவளப் பணேயே சுகமாம் வசிக்கவே"

என்ற திருமூலர் திருமந்திரத் திரட்டிஞலுமறிக.

பற்பத்தின் மகிமை :—விகற்பத்துடன் பாடக்கூடிய தொனியை நீக்கி, சுத்த சுரங்களேயும் நரை, திரை, மூப்பு, சாக்காடாகிய குற்றங்களே நீக்கி, காயசித்தியையும், தேகவன்மையும் கொடுக்கு மென்பதை

"சிந்தூரத்துப் பாடடலே சேர்காய வன்மையுண்டாஞ் சிந்தூரத்துப் பாடடலே செய்யுமுன்னே........." என்பதால் அறிக.

இதன் பத்தியம் :—இதனே உண்ணுங்காலத்து புகையிலேயையும், பெண்ணேயும் தவிர்க்க வேண்டுவதே பத்தியத்தின் இயல்பு என்பதை 'பிரபபத்திரமும் இளம்பிடியும் வர்ச்சிதமே" என்ற தேரன்வாக்கால் அறிக.

பவழ சிந்தூரத்தின்

அனுபானம்		தீரும்நோய்கள்
வெந்நீர்	—	இரத்த மூலச்சூடு
சர்க்கரை	—	புவுத்திரம்
நெய்	—	தலேயிலும் கையிலுமுண்டாம் எரிச்சல்
வெங்காயச் சாறு	—	சத்தி குன்மம்
பானகம்	—	நடுக்கல்
தண்ணீர்	—	வாயிலேப்பு
அதிமதுரம்	—	சூதக சந்நி
துவரையிலேச் சாறு	—	வயிற்று வலி
மாவிலங்கப் பட்டைக்சாறு	—	கிராணி

சய சூரணம்

சயரோகம் சர்வத்திற்கும் மருந்து கேளாய்
சாரமுள்ள கடுக்காயும் கழஞ்சு நாலு
வியமுடைய திப்பிலி சிற்றரத்தை நேராய்
விதமான வால்மிள கிரட்டிச் சேர்த்து
ஜெயமான சாதிக்காய் கழஞ்சு மூன்று
சேர்த்தப்பா வருத்துநீ தூள்தான் செய்து
வியமுடைய தேனிலே அருந்தும் போது
விடையன்மேல் ஆணேயுண்டு வாட்டுங் நோயே.

நோய்ப் பெயர் வரலாறு

Dr. N. சுப்பிரமணியம், L.I.M.

(132-ம் பக்கத் தொடர்ச்சி)

---o---

ஒவ்வொன்றிற்கும் மூன்று சக்திகளும் உண்டு எனல்

மூன்று சக்திகளையும் பிரமா, விண்டு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் ஆன்றோர் ஒப்பிட்டுக் கூறுவர். பிரமா படைத்தற் றொழிலுக்கும், விண்டு காத்தற் றொழிலுக்கும், உருத்திரன் அழித்தற் றொழிலுக்கும் அதிகாரிகளாவர்.

ஆனல் ஒவ்வொருவருக்கும் மூன்று சக்திகளும் உண்டு என்பது கொள்கை. ஒன்றை மூன்றாகவும், மூன்றை ஒன்றாகவும் கொள்வர் ஆன்றோர்.

"பாருருவி னீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற

ஏருருவின் மூவருமே யென்ன நின்ற
இமையவர்தந் திருவுருவே றெண்ணும் போது

ஓருருவம் பொன்னுருவ மொன்று செந்தீ
யொன்றுமா கடலுருவ மொத்து நின்ற

மூவுருவுங் கண்டபோ தொன்றாஞ் சோதி
முகிலுருவ மெம்மடிக ளுருவந்தானே"

என்ற திருவாய்மொழிப் பாசுரம் முற்கூறியதை இனிது விளக்கும்.

நீரை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நீருக்கு மூன்று சக்திகளும் இருப்பதால் அதற்கு முந்நீர் என்ற பேருண்டு. பெரிய நீர்ப்பரப்பாகிய சமுத்திரம் நிலத்தைக் காக்கவும், ஆக்கவும், அழிக்கவுமான முத்தொழில்களை நிகழ்த்திக்கொண்டே இருக்கிறது.

'எல்லா வுயிர்க்கும் ஏமமாகிய நீர்'—புறம் 1; 18
திருமால் 'தானொரு கூறு சலமயனுறே—திருமூலர்
'புனலன், மாயனுதகத் திருவுடம்பு'—தக்கயாக 710

என்ற அடிகளால் நீருக்கு காத்தல் சக்தி இருப்பதை உணரலாம். மற்றவை வந்த வழிக்கண்டு கொள்க.

வாதம் முதலியன இயற்கை நிலையினும் முக்குற்றம் எனப் பெயர்பெறல்

வேற்றுமை பெறாத முதல் வேற்றுமை, வேற்றுமை என்றே அறியப்படுமாறுபோல வாத பித்த சேட்பங்கள் இயற்கை நிலையில் நிற்பினும் முக்குற்றம் என்றே வைத்தியத்தில் வழங்கப்பெறும்.

பழவினை

நோய் பழவினையாலும் வரும். அது கழியத்தீரும். வினை வலியவூட்டும். 'பல்லாவினுய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய்நாடிக்கோடல்' (நாலடியார்) என்றபடி வினைசெய்தவனைத் தெரிந்து வந்தடையும். முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும். நிழலைப்போல வினைப்பயன் தொடரும்.

'பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப் பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுப வித்தனவும், பிறந்த வுடம்புகளான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன.'

'அனுபவம் தீர்ந்த பின்தான் அவிழ்தம் பலிக்கும்' என்பது பழமொழி. ஆனால் விளக்கின்முன் இருள்போல ஞான யோகங் களின் முன்னர் இவை கெடும் என்பது சித்தர் கண்டது.

தருமஞ் செய்யாதாரை இருமல், சோகை, ஈளை, வெப்பு நோய்கள் துன்புறுத்தும். இடி, நாகம், தொண்டை நோய், கழலை முதலியன தருமஞ் செய்வாரை யணுகா. இவை திருமூலர் கருத்துகள்.

அக்கோபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழைவினை வந்தடைந்தக் கால்

—நாலடியார்.

முற்பிறப்பில் நண்டுகளை இச்சித்துக் கால்களை ஒடித்து உண்ட பழைய வினையால் சங்குமணிபோல் அகங்கை தவிர விரல்கள் அழுகிக் குஷ்ட நோயில் துன்பமடைந்து திரிவார்கள்.

'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்றபடி இது நாலடியார் பாட்டாகையால் இதன் உண்மையை வற்புறுத்துவது அவசியமில்லை.

வினைவயத்தாற் பஞ்சபூதபரிணமமாகிய யாக்கையை பழைவினை தொடர்ந்து வரலியல்பே. இதனுண்மையை அனுமான அளவையால் தான் கொள்ளமுடியும். தாய் தந்தையரை அனுமானத்தால்தான்

நிச்சயிக்கின்றோம். கருக்குழியில் இருக்கும்போது நமது வயிற்றில் ஒட்டியிருந்த கொடிவழி உணவு கிடைத்தது. அதன் அடையாளம் கொப்பூழ். தேக்குமரத்தாலான ஒரு பெட்டியைப் பார்த்து அம்மரம் ஒருசமயம் உயிர்மரமாக ஒரு மலைமீது, அநேகமாக ஒரு சமீப மலைமீது வளர்ந்திருந்தது என அனுமானித்தலில் என்னபிசகு? ஆகவே பழவினை உண்டென்பதும் அதை அனுமானத்தால் தீர்மானிக்க முடியும் என்பதும் சித்தர்கள் கண்ட உண்மை.

•வினைப்பயன்

வினை அதன் இயற்கைகுத் தக்கபயனை அளித்துவிடும். இரவைப் பகல் தொடர்வதுபோல வினைசெய்தவனைப் பயன் தொடரும். நிலம், நீர், காலத்திற்கு தக்கபடி உண்ணல் உணர்தல், தொழிற்படலான பல வினைகளால் வாத பித்த சேட்பங்கள் நிலைமாறி உள்ளத்தும் உடலிடத்தும் நோயுண்டாக்கும்.

நோய்ப்பட்ட சில உடற்பாகத்து சில, பல, புழுப்பூச்சிகள் தோன்றுதலியல்பே. நோய்ப்பட்டதால் பூச்சிகள் தோன்றினவா அல்லது பூச்சிகளால் நோயுண்டாயினவா என்று ஆராய்வது பாத்திரத்திற்கும் நெய்க்கும் ஆதாரம் தேடிய கதைதான்.

நெய்க்குப் பாத்திரம் தேடுவதுபோல, நோய்ப் பூச்சிகளும் இருப்பிடம் தேடுகின்றன. பாத்திரத்தில் நெய் வைப்பதுபோல வலியிழந்த உடம்புகளில் நோய்ப் பூச்சிகள் வலுப்பெற்று மலிகின்றன.

உள்ளநோய்

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆன நான்கு உட்கருவிகளையும் உள்ள இடம் உள்ளம். உள்ளம் இவ்வுட்கருவிகள் தவிர அவை தொழிற்பட்டுச் சேமித்து வைத்த எண்ணம், காட்சி முதலியவற்றையும் உள்ளது. மனம் நினைக்கும், புத்திவிசாரிக்கும், சித்தம் தீர்மானிக்கும், அகங்காரம் 'நான் செய்தேனபார்' என அகங்கரித்து இன்புற்ருக்கும்.

மனம் பளிங்குபோன்றது. ஐம்பொறிகள் வழியாகவும் உள்ளத்து வேறு பொருட்கள் வழியாகவும் பல தோற்றங்கள் அப்பளிங்கில் தோன்றி மறையும். நாம் செய்யவேண்டிய எந்த வேலையையும் எண்ணப்படங்களாக இம் மனப்பளிங்கில் தோற்றுவித்து ஆய்ந்து தீர்மானித்து உருப்படுத்துகிறோம். ஒரு எண்ணம் அதைவிட முக்கியமான ஒரு எண்ணத்தால் மாற்றப்படும்.

சினிமாத்திரையில் சரடு ஓடுதலின்றி ஒரே படம் நின்றாலும் மிக மெது அல்லது விறைவினல் குழம்பினாலும் எவ்விதமிருக்குமோ அதேபோல உள்ளம் தொழிற் படுவதிற்கெட்டு மனப்பளிங்கில் ஒரே எண்ணம் நிலைத்தாலும் அன்றிக் குழம்பினாலும் அதனால் மனங் கெட்டுப்பின் உள்ளமுங் கெடுவதால் உள்ளநோய் உண்டாகிறது.

உடற்பிணி

உள்ளத்தைத் தவிற உடலிலுள்ள மற்ற கருவிகள் வாத பித்த சேட்ப நிலைமாறிப் பிணிப்படுவதால் உடற்பிணி ஏற்படுகிறது. உடற்பிணிக்கு உள்ளமும் ஒரு காரணம்.

பெயர்வரலாறு

நோயினது பெயரை மாத்திரம் தெரிந்து கொள்வதால் பலன் ஒன்றுமில்லை. மருந்துக் குப்பிகளில் மருந்துகள் இன்னதென விளங்கும்படி தலைச்சீட்டு ஒட்டிவருவதுபோல நோயாளிகளும் வருவதில்லை. நோயைக் கணித்து நீக்கவும் தடுக்கவும் நோயினது பெயர் வரலாற்றையும் நன்கறிதல் அவசியமாகும்.

குருவிடம் முறையாய் மருத்துவங் கற்ற வைத்தியன்தான் கற்ற ஆயுள்மறையளவுடனும் முன்னோர் நூல்கள், அனுபவம் இவற்றுடனும் அவ்வக்கால இடங்களுக்குத் தக்கபடி எவ்விதம் நோய்களால் மக்கள் வருந்துகின்றனர் என்பதையும் தெரிந்திருந்தால்தான் நோய்தீர்த்து நோய் வருவழியையும் அடைத்தல் இயலும். நோய் வருவழியை அடைத்தலுக்கு நமது முன்னோர்கள் கைக்கொண்ட சாதனத்திற்குக் 'கண்ணடைப்பான்' என்று பெயர்.

கண்ணடைப்பான்

பிணி ஏடு என்பது நோயாளிகளுக்குப் பக்கத்தில் விளக்கம் குறிப்பதற்காக அமைப்பது. இப்போது பிணியேடு அல்லது பிணியோலை எனக் குழந்தைகள் பிணிப்பட்டபோது தொட்டிலில் கட்டி வைக்கும் பனையோலைக்குப் பெயர். நோயாளிக்குப் பக்கத்திலிருப்பவர் நோயாளரிடம் காணும் குறிகுணங்களை ஓலையில் எழுதிப் பக்கத்தின் கட்டுவர். தான் கண்ட குறி குணங்களையும் தீர்வின் விவரங்களையும் குறித்துவைப்பர். நோய்தீர்ந்தவுடன் அவ்வோலையை ஒரு பொதுமடத்திலாவது கோயிலிலாவது சேர்த்து விடுவர். நோய்தீர்ந்த அறிகுறிக்கு எந்த உறுப்பு நோய்ப்பட்டதோ அது போல் வெள்ளி, மண் முதலியவற்றால் செய்யப்பட்டதிற்குக் கண்ணடைப்பான் என்று பெயர். கண்ணடைத்தல் என்பதற்குத் துவார மடைத்தல் அல்லது வழியடைத்தல் என்பது பொருள்.

"பெருவழி யறுகையு நெருஞ்சியு மடர்ந்து
கண்ணடைத் தாங்கு"—மணி 12-60

என்பதில் வழி அறுகாலும் நெருஞ்சியாலும் வழியடைந்தது என்பது பொருள்.

நோய் வருவழியை யடைத்தற்குக் கண்ணடைப்பான் என்ற உருவங்கள் காரணமாயிருப்பதால் காரணப்பெயராயிற்று. மடம் கோயிலிலுள்ள துறவிகள் அவ்வுருவங்களையும் ஏடுகளையும் கவனித்துப் பயின்று அவ்வித நோய் பரவாததற்கும் பின்னால் ஏற்படாதிருக்கும் பொருட்டும் ஆன்முயற்சிகளைச் செய்வர்.

இம்முறை கிரீஸ்தேசம் பரவியது

கிறித்து பெருமான் பிறப்பதற்கு 1300 ஆண்டுகட்கு முன்னர் கிரேக்க தேசத்திலிருந்து ஈஸ்கலேபியஸ் என்ற பெரியார் மலையாளக் கரைவழி தமிழ் நாட்டுக்குவந்து மேற்குறித்த அரிய முறைகளைக் கண்டு போற்றி கிரீஸ்தேசம் முழுதும் பரப்பினார். அதனால் மக்கள் நோயின்றி இனிது வாழமுடிந்ததால் அவரைக் கடவுள் அவதாரம் எனப்போற்றினர். கவிகள் அவரைக் கடவுளெனப்பாடினர். பின் அவருக்குக் கிரீஸ்தேசம் முழுவதும் கோயில்கள் எழுந்தன. அவரது மரபினரும் 'மாணுக்கர் மரபினரும் இக்கோயில்களில் இருந்து 'ஈஸ்கலேபியஸ்' பகவானிடமிருந்து பெற்ற ஞானத்தை இரகசியமாகவே வைத்துக்கொண்டு பேதிமருந்து வாந்திமருந்து முதலிய அவர் முறைகளால் மருத்துவஞ் செய்வாராயினர். நோய்நீங்கிய மக்கள் அக்கோயில்களுக்குத் தங்களாலான உதவிகளைச் செய்தனர்.

நோய் நீங்கியதற்கு அறிகுறியாகத் தந்தம் கட்டை இவற்றில் தங்கள் நோய்களைக் குறித்துக் கோயில்களில் கொடுப்பார்கள். பூசாரிகள் அதில் தாங்கள் கொடுத்த மருந்துப் பெயரை எழுதிப் பத்திரமாகச் சேர்த்து வைப்பார்கள்.

முறை செய்தல்

கி. மு. 5-வது நூற்றாண்டில் கிரேக்கர் நாகரீகத்தில் உச்ச நிலையை அடைந்திருந்தனர். அக்காலத்தில் ஹிப்பாகிரட்டீஸ் என்ற வைத்திய நிபுனர் ஈஸ்கலேபியல் பகவான் கோயிலில் பூசை செய்து வந்தார். அறிவுமிக்க ஹிப்பாகிரட்டீஸ் எல்லாக் கோயில்களிலிருந்தும் நோய்தீர்ந்தாரால் கொடுக்கப்பட்ட தம்தம் கட்டைகளில் எழுதியதைப் பயின்று, வரிசைப்படக் குறித்து முறை செய்தார். பூசாரியாயிருந்ததால் இரகசியமாக வைத்திருந்த இப்பொருட்கள் இவர் கைக்கு எட்டின. இவர் தமிழ் நாட்டுக்கும் வேறு பல நாடுகளுக்கும் சென்று மருந்து முறைகளைத் தங்கள் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும், கோயிலினின்றெடுத்துக் குறித்த குறிப்பிற்கும், யுக்தியனுபவத்திற்கும் ஒட்டி அநேக நூல்களை எழுதினார். அதனால் இன்றும் அவரை 'மேனாட்டு வைத்தியத்திற்குத் தகப்பன்' எனக் கொண்டாடுகிறார்கள்.

தற்கால நிலை

தமிழ் நாட்டில் இவ்வழக்கம் காலமாறுதல்களால் விட்டுப்போய் நோய்ப்பட்ட குழந்தைத் தொட்டிலில் ஏதோ சில எழுதிய சுவடியைக் கட்டுவதும், சாமிக்கு வேண்டிக்கொண்டு நோய் நீங்கிய பாகங்களான கண், காது, கால்போன்ற உறுப்புக்களை, வெள்ளி, மண், முதலியவற்றால் செய்து சில கோயில்களில் வைப்பதும் ஆகிய இவற்றோடு நின்றுவிட்டதைக் காணலாம்.

பிணி ஏடுகளை (Case Sheets) தற்கால ஆஸ்பத்திரிகளில் நோயாளிக்குப் பக்கத்துச் சுவற்றில் தொங்கவிட்டிருப்பதைக் காணலாம்.

சித்த முறை

குருமுறையாகக் கற்ற ஆயுள் மறையை நடைமுறையில் எப்போதும் சித்தமாகவே தெளிவு படுத்திவைத்திருப்பதின் அவசியத்தை உணர்ந்த துறவிகள் மருந்தைப் பதினெண் வகைப்படுத்தி, பதினெண்பேர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தலைமையாக இருந்து குறை செய்யும்படி செய்தனர்.

அப்பதினெண் பகுதிகளையும் விருதை சிவஞான யோகிகள் கண்டவாறு (நீலலோசனி 14-9-1925) கூறுவாம்.

கருப்பந் தோற்றவியல்	மருந்தின் குணவியல்
உடற் செயலியல்	புண்ணியல்
உடற் கூறியல்	விடவைத்திய வியல்
முத்தாதியல்	ஆயுள் வளரியல்
எண்வகைத் தேர்வியல்	பால வாகடவியல்
ஏழுதாதியல்	தூய்மையியல்
சுவையியல்	யோக வியல்
கழிவுப் பொருளியல்	தொற்று நோயியல்
நோய் முதல் குண மருந்தியல்	நோய் மருந்திமைபியல்

இம்முறையால் வைத்தியர்கள் எக்காலத்திலும் நோய்நீக்கச் சித்தமாய் இருக்க முடிந்தது.

சித்தமுறை சீர்பெறும் விதம்

இவ்விதம் செப்பனிடப்பட்டுச் சீர்பெற்று எச்சமயத்தும் நோய் தீர்க்கச் சித்தமாக்கப்பட்டு, செம்மை பெற்றோங்கிய சிறந்த மறை, காலவேறு பாடுகளால் சீர்குலைந்தது. அதற்காகக் கவன்று வாளா இருத்தல் சித்தர் வழிவந்தோர்க்குச் சிறப்பன்று.

ஒரு கடுவெளிக்குப் பிறகு மாலை நேரம் உலாவிவரச் சென்ற ஒரு அறிவர் ஒருமரத்தடியில் முட்டைகளுடன் சிதறுண்டு கிடந்த குருவிக் கூட்டைக் கண்டார். குருவிக்காக இரங்கினர். நீண்ட நேரம் சூழ்ந்திருந்த இரக்கச்சிந்தனை கலைந்து வீடுதிரும்பப் புறப் பட்டவர் அம்மரத்தைப் பார்த்தார். கிளையில் வேறு கூடுகட்டி யிருந்தது.

வெட்கப்பட்டார். மக்களே சென்றதைக் குறித்துக் கவன்று காலம் போக்குபவர். இக்குருவி நமக்குச் சிறந்ததோர் பாடங் கற்பிக்கிறது. வருந்தி வீண்காலம் போக்காது உடனே மறுபடியும் கூட்டைக் கட்டிவிட்டது. இவ்வித எண்ணங்கள் அவர் மனத் திரையில் ஓடின. இக்குருவி நமக்குக் குருவாகுக.

நோய்ப் பெயர்

"பாரப்பா வாதமது எண்பத்நான்கு
பார்க்கவே பித்தமது நாற்பத்தெட்டு
தாரப்பா சேட்பங்கள் தொண் ணூற்ருறு
தனுர்வாயு முன்னூறு கயமோ ஏழு
வேரப்பா பெருவயறு எட்டதாகும்
வெகுசூலை யிருநூறு பாண்டுபத்து
நாரப்பா நேத்திரநோய் தொண் ணூற்ருறு
நறுசிலந்தி யறுபதுவும் குன்மமெட்டே

எட்டப்பா சன்னிவகை எழுபத்தாறு
எழுவையுடன் பொருகழலை தொண் ணூற்றைந்து
மட்டப்பா சுரமதுவோ எண்பத்தைந்து
மகோதரமோ ஏழாகும் சிரசில் வீக்கம்
முட்டப்பா அஞ்சாகும் உடம்பில் வீக்கம்
முதிரவே பதினறு பிளவை பத்து
குட்டப்பா படுவனது பதினென்ருகும்
குமிழிநோய் எழுக்கும் பீலிஎட்டே

பீலியுடன் உறுவசியம் அஞ்சதாகும்
பொரிகரப்பான் தொண் ணூறு கெண்டை பத்து
காலிநோய் குட்டமது இருபதாகும்
கதிர்வீச்சு மூன்ருகும் திட்டை அஞ்சு
சேலிநோய்ச் சோபமது பதினறுக்கும்
சொல்லிசிவு ஆறுக்கும் மூர்ச்சை ஏழு
வேலிநோய்ப் படுவதிலே நாற்பத்தாறு
வெகுமூலம் ஒன்பதாம் கழல்நோய் பத்தே

பத்தான பீனிசங் கடிவிஷ மெழுபத்தாறு
　பிணிநாக்குப் பல்லுநோய் எழுபத்தாறு
கத்தாகுங் கிராணியது இருபத்தஞ்சு
　கண்ணுடனே மாலையது இருபதாகும்
கொத்தாகும் அதிசாரம் இருபத்தஞ்சு
　கொன்கட்டி பனிரண்டு கிருமி ஆறு
முத்தாகும் மூட்டு நோய் முப்பதாகும்
　முதிர்ந்த நோய் இருபது சத்தி அஞ்சே

அஞ்சாகுங் கல்லடைப்பு எண்பதாகும்
　அதிர்வாய்வு தொண்ணூறு திமிர்நோய் பத்து
மஞ்சாகும் விப்புருதி பதினெட்டுக்கும் வளர்
　மேகம் இருபத்தோர் நீரோவைந்து
பஞ்சாகும் விஷபாகம் பதினறுக்கும்
　பகர்காது நோய்பத்து விக்கல்பத்து
துஞ்சாகும் அரோசியங்கள் அஞ்சதாகும்
　சொல்மூக்கு நோய்பத்து உலகத்தோரே

குத்தாகுங் கடிதோஷம் ஐந்நூறுக்கும்
　குறிகாயங் குத்துவெட்டு எழுநூறாகும்
பத்தாகுங் கிரந்தியுமே நாற்பத்தெட்டு
　பறக்கின்ற பொரிவிஷமோ எண்ணூறாகும்
முத்தாகும் நாள்கிட்டும் பிறநீர்க்கோவை
　முதிரவே இருநூறு துடிநோய் நூறு
கொத்தாகும் பிள்ளை நோய் நூறதாகும்
　கூறினேன் வியாதியுட விபரந்தானே

கூறினேன் வைத்தியனை அழைக்கு முன்னே
　கொல்லுவது எழுநூறு வைத்யன் கையில்
மாறினேம் நோய்கள் தெரியாமல் பார்த்து
　வகையாகச் சாகுகிறது எண்ணூறாகும்
தேறியே பலநூலும் பார்த்தபேர்க்குத்
　தீர்வாகும் இருபத்து ஐந்து நூறு
பேறியது நானூற்று நாற்பத்தெட்டுப்
　பெருவயது உள்ளமட்டும் பேர்ந்திடாதே"

—இரத்தினச் சுருக்கம் ஐந்நூறு.

இப்பாட்டுக்களில் நோய்களின் பெயர்களைத் தொகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. கடைசிப் பாட்டு 4448 நோய்களை நான்கு வகைப்படுத்திக் காட்டுகிறது. நோய் எண்ணிக்கைகளைக் கூட்ட 4492 ஆகிறது. ஆதலால் பாட்டில் பிசகிருப்பது வெளிப்படை.

நோய்ப் பெயர்கள் தமிழில் ஆழ்ந்த உண்மைக் கருத்துகளைக் கொண்டு மிளிர்பவை. இப்பாட்டில் அவை மக்கியிருக்கின்றன. ஒளிவிடும் விண்மீன்கள்போன்ற தூய தமிழ் பெயர்களுடன் மேகம் படர்ந்ததுபோல் பிழைச் சொற்கள் கலந்திருக்கின்றன.

இத்தொகையைத் தக்கபடி தற்காலத்திற்குதவும்படி வேறு சித்த நூல்கள் உதவிகொண்டு விரித்தெழுதும்போது பிழைகளை நீக்க இயலும். அச்சமயம் பழையன கழித்துப் புதியன புணர்த்தல் அவசியமாயில் 'புதியன புணர்த்தல் பழையவற்றோடு முரணாத வழியே யென வுணர்க' எனச் சிவஞான முனிவர் கூறியுள்ளதைக் கவனிக்கவேண்டும்.

நோய்ப் பெயர்களை அவ்வப்போது சீர்படுத்த மேனாடுகளில் அரசாங்க ஆதரவில் சங்கமுண்டு. நோய்ப் பெயர் (Nomenclature of Diseases) என்ற நூல்முகவுரையைப் பார்க்க. சித்த வைத்தியத்திற்கும் அவ்விதசங்கம் அவசியமானது.

இனித் தனித்தனி நோய்களையும் அவைகளின் விளக்கங்களையும் ஆராய்வோம்.

—(:0:)—

நளிர் சுரத்திற்கு மாத்திரைகள்.

கோ. து.

1. சுத்தித்த வெள்ளைப் பாஷாணக் கட்டியை வெள்ளெருக்கம் பாலால் சுருக்கிட்டுக் கழுவி பலம் ஒன்று, இலிங்கத்தைத் தாய் பாலில் நான்கு சாமம் ஊறவைத்துக் கழுவி பலம் ஒன்று, கெட்டி மிளகு பலம் ஒன்று இவைகளை நிறுத்து கல்வத்தில் தனித்தனிப் பொடித்து, அரைத்து, ஒன்றாய்ச் சேர்த்துப் பழச் சாற்றால் மெழுக அரைத்து பயறளவு மாத்திரைகள் செய்து உலர்த்திவைத்துக் கொள்க.

ஒருமாதம் பழகிய பிறகு ஒவ்வொரு மாத்திரையாக தினம் இரு வேளை குளிர்ந்தநீரில் மூன்று நாள் கொடுக்க நளிர் சுரம் நீங்கும். புளி, புகை ஆகாது. இச்சா பத்தியம்.

ஏழாம்நாள் மூன்று விராகன் மிளகை வறுத்து முறைப்படிக் குடிநீர் செய்து கொடுக்கப் பாஷான வீறு குறையும், வாந்தியும், பித்தமும் அதிகமானால் மேற்படிக் குடிநீரை இரண்டு மூன்று வேளையாக மூன்று நாள் கொடுக்கவும்.

2. சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த இலிங்கம் இரண்டையும் விராகன் நாலு வீதம் எடுத்து ஊமத்தைக் குடிநீரால் ஒரு சாமம் அரைத்து முன்போலவே மாத்திரைகள் செய்து, ஒவ்

வொன்ருக வெல்லத்தில் பொதிந்து தினம் இருவேளை மூன்று நாள் கொடுக்க குளிர்சுரம் நீங்குமென அகத்தியர் வல்லாதி கூறுகிறது.

3. வெள்ளாவியில் வைத்து அவித்தெடுத்த வெள்ளைப் பாஷாணம் ஒரு பலத்தைப் பிரம்மதண்டு இலைச்சாற்ருல் மெழுகுபோல் அரைத்து சிறு பில்லைகளாகத் தட்டி உலர்த்த. பதங்கச் சட்டிகள் ஒரு ஜதை யெடுத்து உள்ளும் வெளியிலும் குடியோட்டி யிலை சாற்றை ஏழுதரம் பூசி பூசி யுலர்த்தி, முற்கூறிய பில்லைகளை அதில் வைத்து முறைப்படி சீலை முதலியன செய்து முச்சாமம் எரித்து, ஆறவைத்துப் பிரித்து மேல் சட்டியில் படிந்திருக்கும் பதங்கத்தைச் சுரண்டி வைத்துக்கொள்க.

இது ஒருபங்கும், சிவப்பு காசிக்கட்டி இருபங்கும் சேர்த்து மிளகு குடிநீரால் முச்சாமம் அரைத்து பயறளவு மாத்திரைகள் செய்து உலர்த்தி தினம் இருவேளை ஒவ்வொரு மாத்திரையாக நீரில் கொடுக்க, குளிர்சுரம் நீங்கும்.

4. மேற்படி பதங்கமும் சாம்பிராணிப் பதங்கமும் சமன் சேர்த்து, அன்னக் கொதிநீரால் அரைத்துப் பெருங்கடுகு அளவு மாத்திரைகள் செய்து, ஒன்றை தகுந்த அனுபானங்களில் இரு வேளை கொடுக்க எத்தகைய சுரமும் நீங்கும். மூன்று வேளைக்கு மேல் கொடுக்கவேண்டிய அவசியமில்லை யெனவும், இதனையே பாலேட்டில் தினம் ஒரு வேளையாக மூன்றுநாள் கொடுக்க தாது விருத்தியாம் எனவும் சி. கண்ணுசாமியவர்கள் இயற்றிய பதார்த்த குணம் கூறுகிறது.

5. சுத்தித்த வெள்ளைப் பாஷாணத்தை முந்திரிப் பழச் சாற்ருல் ஆறு சாமம் சுருக்குகொடுத்து, பிராயன் பட்டை குழித் தைலத்தாலும் அங்ஙனமே செய்து, அரைத்றுக் கடுகு அளவு மாத்திரைகள் செய்து தக்க அனுபானங்களில் ஒவ்வொன்ருக தினம் இருவேளை கொடுக்கவும்.

(போகர் 700.)

இம்மாத்திரைகள் 'இரத்த முறிஞ்சிவரு சுரம்' என்ற மலேச் சுரத்திற்குப் பயன்படுமா என ஆராய்ச்சி செய்து இப்பொழிலின் வாயிலாக அறிவிப்பார்களா?

---o---